நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 588/2021

வழக்கு சாட்சி : PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீனிவாசன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 53 / 2025 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of 10.**10.2025**

**(1வது** <u>எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3வது எதிரிநீதிமன்றத்தில் ஆஜர் ஆவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது .)</u>

**<u>மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னுடைய பூர்விகம் நாகப்பட்டினம் . வள்ளலாளர் கோவில் தலைவர் சைவமணி சௌந்தராஜன் ஆவார். அவரது பூர்விகம் கீச்சாங்குப்பம் ஆகும். இன்றும் அவ்ர் தான் வள்ளலாளர் கோவில் தலைமை பூசாரியாக இருந்து வருகிறார். அவர் மேற்படி கோவிலை 2000ம் ஆண்டிற்கு முன்பிருந்து இன்று வரை நிர்வாகம் செய்து வருகிறார். நான் மேற்படி கோவிலுக்கு பக்தராக சென்று மேற்படி கோவிலில் பணி செய்து வருகின்றேன். அ.சா. 1மற்றும் அவரது குடும்பத்தாரை 2016 முதல் அவர்கள் கோவிலுக்கு வந்த வகையில் தெரியும். 2016ல் அ.சா 1 குடும்பத்தார் மற்றும் 1வது எதிரி மேற்படி கோவிலுக்கு வந்தபோது பணம் முதலீடு செய்வது பற்றி பேசிக் கொண்டார்கள். மேற்படி பேசிக் கொண்ட படி பணம் போட்டார்களா, இல்லையா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.

மேற்படி பணம் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்தின் தலைமை நிறுவனம் கோவையில் உள்ள பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. அ.சா. 1 மேற்படி பணம் முதலீடு செய்யப்பட்ட நாகப்ப்ட்டினத்தில் உள்ள நிறுவனத்தின் தலைமை நிறுவனம் கோவையில் உள்ளது என்றும், அதனை தான் கோவை சென்று பார்த்தபோது அவ்வாறு மேற்படி நிறுவனத்தின் கிளை நாகப்பட்டினத்தில் உள்ளதாகவும் அ.சா. 1

அவரது நண்பர் சிங்காரவேலு என்பவரிடம் சொல்லியுள்ளார். அதனை சிங்கார வேலு என்னிடம் சொன்னார்.

மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு என்னை சம்மன் கொடுத்து அழைத்தார்களா, என்றால் இல்லை. என்னை கோவிலில் வைத்து அழைத்தார்கள். நான் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றேன். 1,2வது எதிரிகளை எந்த தேதி எங்கு வைத்து யார் கைது செய்தார்கள். என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 25.12.2020ல் நான் காவல் நிலையம் சென்ற போது அங்கு 1,2வது எதிரிகளை பார்த்தேன். காவல் நிலையத்தில் 1வது எதிரி பணத்தை பெற்றது சம்பந்தமாக சொல்ல சொல்ல கணினியில் தட்டச்சு செய்தார்கள். 2 எதிரிகளிடமும் தனித்தனியாகத்தான் வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி இரண்டு வாக்குமுலங்களிலும் 1,2வது எதிரிகளிடம் தனித்தனியாக கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரி. மேற்படி வாக்குமூலங்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் பணம் முதலீடாக பெற்றது சம்பந்தமாக எழுதப்பட்டிருந்தது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்களில் தட்டச்சு செய்யப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒவ்வொரு பக்கத்திலும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றப்பட்டதா என்றால்ி இல்லை. எதிரிகள் தலா ஒரு கையொப்பம் செய்தார்கள்.

1,2வது எதிரிகளிடம் எத்தனை மாதிரி கையொப்பங்கள் பெறப்பட்டது என்றால் எத்தனை என்று எனக்கு தெரியாது. 1,2 எதிரிகளிடம் என் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும் , 1,2வது எதிரிகளிடம் என் முன்பு கையொப்பங்கள் பெறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு பற்றிய விபரங்கள் எனக் கு எதுவும் தெரியாது என்றும், புகார்தாரர் குடும்பம் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1,2 எதிரிகளிடம் என் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும் , 1,2வது எதிரிகளிடம் என் முன்பு கையொப்பங்கள் பெறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் தான் ஒப்புதல் வாக்குமூலம், மாதிரி கையொப்பங்கள் பெறப்பட்டது. வழக்கிற்காக போலீஸரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கணினியில் யார் ஆய்வாளர் தட்டச்சு செய்தாரா என்றால் இல்லை.